# என்னை இயக்குவது கழக உடன்பிறப்புகளும் - தோள் கொடுக்கும் தோழமைக் கட்சிகளும்தான்!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை... முதல் பக்கத் தொடர்ச்சி

- ஆட்சிப் பொறுப்பேற்றதும், நான் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணத்துக்குதான்! இந்தப் பயணங்களால் மாதந்தோறும் 800 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை ஒவ்வொரு மகளிரும் சேமிக்கின்றார்கள். இதன் மூலமாக, 2021 மே மாதத்திலிருந்து இப்பொழுது வரை தோராயமாக 60 ஆயிரம் ரூபாய் வரை சேமித்திருக்கின்றார்கள். பெண்களுக்கான மிகப் பெரிய சமூகப் பொருளாதார பலத்தை இந்தத் திட்டம் வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)
- அடுத்து, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்குகின்றோம். இந்தத் திட்டத்தில் இதுவரை ஒவ்வொரு மகளிருக்கும் 29 ஆயிரம் ரூபாயை கொடுத்திருக்கின்றோம். அந்தப் பெண்கள் எல்லோரும் எங்கள் அண்ணன் கொடுக்கின்ற மாதாந்திர சீர் என்று பெருமையுடன் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
- இந்த ஆண்டு தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு 2 கோடியே 23 இலட்சம் குடும்பங்களுக்கு 3 ஆயிரம் ரூபாயை வழங்கினோம். தமிழ்நாடே மகிழ்ச்சியுடன் பொங்கல் திருநாளை கொண்டாடியது. தமிழ்நாடு முழுவதும் 20 இலட்சத்து 59 ஆயிரம் பள்ளிக் குழந்தைகள் தினமும் காலையில் சூடான, சத்தான, சுவையான உணவை சாப்பிடுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
- நான் முதல்வன் திட்டத்தில் 48 இலட்சத்து 65 ஆயிரம் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)
- புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களில் 12 இலட்சம் மாணவ, மாணவியர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
- 2003 முதல் 2021 வரை, அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வி திட்டத்தில் 6 மாணவர்கள் மட்டுமே பயனடைந்திருக்கின்றார்கள். ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தில் 385 மாணவர்களுக்கு 162 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, ஆக்ஸ்போர்டு உள்ளிட்ட உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களில் படிக்கின்றார்கள்.
- அரசு ஊழியர்களுடைய 23 ஆண்டுகால கோரிக்கையான உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) நாம் ஆட்சிக்கு வந்தபோது அரசு ஊழியர்களுக்கு 17 விழுக்காடாக இருந்த அகவிலைப்படியை இப்பொழுது 58 விழுக்காடு எனுமளவுக்கு உயர்த்தி வழங்கியிருக்கோம்.
- 2 இலட்சம் விவசாயிகளுக்கு புதிய இலவச மின் இணைப்புகள், (மேசையைத் தட்டும் ஒலி)
- 14 புதிய உழவர் சந்தைகள் தொடக்கம்.
- 2 கோடியே 56 இலட்சம் பேர் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
- “இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48” திட்டத்தில் சாலை விபத்துக்குள்ளான 5 இலட்சத்துக்கும் அதிகமானோரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு 483 கோடி ரூபாய்க்கு காப்பீடு வழங்கப்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)
- கடந்த 5 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 1 இலட்சத்து 34 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)
- 2 இலட்சம் பேருக்கு கலைஞர் கனவு இல்லம் வீடுகள். (மேசையைத் தட்டும் ஒலி)
- 22 இலட்சத்து 71 ஆயிரம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா. (மேசையைத் தட்டும் ஒலி)
- 4 ஆயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

### 15,117 அரசுக் கோப்புகளில் கையெழுத்திட்டிருக்கிறேன்!

**நான் பொறுப்பேற்று, இந்த அரசு பொறுப்பேற்று, இன்றோடு ஆயிரத்து 724 நாட்கள் ஆகிறது. இந்த ஆயிரத்து 724 நாட்களில், 8 ஆயிரத்து 685 நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொண்டிருக்கிறேன். 15 ஆயிரத்து 117 அரசு கோப்பு களில் கையெழுத்திட்டு இருக்கிறேன்; சென்னையைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களுக்கு 173 முறை பயணம் மேற்கொண்டிருக்கிறேன். அதிலேயும், 71 மாவட்ட மாபெரும் அரசு நலத்திட்ட விழாக்களில் பங்கேற்று, 44 இலட்சத்து 44 ஆயிரத்து 721 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி இருக்கிறேன்.**

- 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கோயில் சொத்துகள் மீட்பு. (மேசையைத் தட்டும் ஒலி)
- 12 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய தொழில் முதலீடுகள் ஈர்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)
- தாயுமானவர் திட்டத்தில் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 27 இலட்சத்து 55 ஆயிரம் பேருக்கு வீடு தேடி ரேஷன் பொருட்கள்.
- 5 ஆயிரத்தி 700 கோடி ரூபாய் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக ஒதுக்கீடு.
- சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் வென்ற 200 விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணி. (மேசையைத் தட்டும் ஒலி)
- கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை. (மேசையைத் தட்டும் ஒலி)
- மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்.
- சென்னையில் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்.
- திருச்சி பஞ்சப்பூரில் கலைஞர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்.
- முதல்வர் படைப்பகங்கள்.
- 38 மாதிரிப் பள்ளிகள்.
- 37 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.
- 10 இலட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினிகள்
- 19 தோழி விடுதிகள்.
- 141 மினி ஸ்டேடியங்கள்.
- பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஆயிரம் கோடி ரூபாயில் தொல்குடி திட்டம்.
- ஆயிரம் கோடி ரூபாயில் அயோத்திதாசர் பெயரிலான ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்.
- 6 ஆயிரத்தி 45 கோடி ரூபாயில் வடசென்னை வளர்ச்சித் திட்டம்.
- நெடுஞ்சாலைத் துறை மூலமாக, 24 ஆயிரத்தி 774 கிலோமீட்டர் நீள சாலைகள் 180 உயர்மட்டப் பாலங்கள்.
- 20 ஆயிரத்து 484 கிலோ மீட்டர் தூரத்துக்கு கிராமச் சாலைகள் மேம்பாடு.
- 121 தடுப்பு அணைகள்
- 101 அணைக்கட்டுகள்
- மிக நீளமான, G.D. நாயுடு மேம்பாலம் (மேசையைத் தட்டும் ஒலி)
- மிக நீளமான, வீரமங்கை வேலு நாச்சியார் மேம்பாலம்
- 87 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம், சுமார் 3 கோடி மக்கள் பயன்பெறும் 75 இலட்சம் வீட்டு இணைப்புகள். (மேசையைத் தட்டும் ஒலி)
- விடுதலைப் போராட்ட வீரர்கள் உள்ளிட்ட, முக்கியத் தலைவர்களுக்கு 23 மணிமண்டபங்கள் 70 சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)
- சென்னை வள்ளுவர் கோட்டம் சீரமைப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)
- கேரள மாநிலம் வைக்கத்தில் பெரியார் நினைவகம் சீரமைப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)
- கீழடி அருங்காட்சியகம்.
- பொருநை அருங்காட்சியகம். (மேசையைத் தட்டும் ஒலி)
- கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம். (மேசையைத் தட்டும் ஒலி)
- கலைஞர் நூற்றாண்டு பூங்கா.
- கோவையில் செம்மொழிப் பூங்கா. (மேசையைத் தட்டும் ஒலி)
- தொல்காப்பிய பூங்கா சீரமைப்பு.
- 39 கோடி ரூபாயில் சென்னையில் ஹஜ் இல்லம் கட்ட உத்தரவு.
- 10 கோடி ரூபாயில் தொன்மையான தேவாலயங்கள் புதுப்பிப்பு

## சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் உயர்வு!

என்று சொல்லிக் கொண்டே போகலாம். இன்னும் நிறைய திட்டங்கள் இருக்கிறது. சொல்வதற்கு நேரம்தான் இல்லை.

இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், ஒரு சாதனை செய்தால், அதை மிஞ்சுவதாக இன்னொரு சாதனை வரும்; அடுத்து அதை விஞ்சுவதாக மற்றொரு சாதனை வரும். இப்படி சாதனைக்கு மேல சாதனைகளைப் படைப்பதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் பொறுப்பேற்று, இந்த அரசு பொறுப்பேற்று, இன்றோடு ஆயிரத்து 724 நாட்கள் ஆகிறது. இந்த ஆயிரத்து 724 நாட்களில், 8 ஆயிரத்து 685 நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். 15 ஆயிரத்து 117 அரசு கோப்புகளில் கையெழுத்திட்டு இருக்கிறேன்; சென்னையைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களுக்கு 173 முறை பயணம் மேற்கொண்டிருக்கிறேன். அதிலேயும், 71 மாவட்ட மாபெரும் அரசு நலத்திட்ட விழாக்களில் பங்கேற்று, 44 இலட்சத்து 44 ஆயிரத்து 721 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி இருக்கிறேன். அதுமட்டுமின்றி, அடிக்கல் நாட்டியது, முடிவுற்ற திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தது என எல்லாவற்றையும் புள்ளிவிவரத்தோடு என்னால் சொல்ல முடியும்.

கடந்த 5 ஆண்டுகளில், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ன செய்தான் என்றால், ஒவ்வொரு நாளும் மக்களுக்காக வாழ்ந்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக திட்டங்களைத் தீட்டினான்! (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தமாக தமிழ்நாட்டை வளர்த்தெடுத்தான்! (மேசையைத் தட்டும் ஒலி)

### பகுதி நேர ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றம்!

இவையெல்லாம் வெறும் புகழ்ச்சி இல்லை; எல்லாமே உண்மை! இதை எதிர்க்கட்சிகளால் தாங்கிகொள்ள முடியாது என்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

#### ஒவ்வொரு நாளும் மக்களுக்காக வாழ்ந்து தமிழ்நாட்டை வளர்த்தெடுக்கிறேன்!

ஆனால், தமிழ்நாட்டினுடைய நலனுக்காகச் செயல்பட வேண்டிய ஆளுநர் அவர்கள், தமிழ்நாட்டுக்கு எதிராக, மக்களுக்காகப் பாடுபடும் நமக்கு எதிராகத் தொடர்ந்து செயல்படுவதுதான் வேதனையா இருக்கிறது. ஆளுநர் அவர்கள், தான் படிக்க வேண்டிய உரையைப் படிக்காமல் சென்றது வேடிக்கையாக இருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், அவர் வகிக்கின்ற பதவியை, அவரே அவமானப்படுத்துகிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே, ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்து கொண்டு கேவலப்படுத்துற செயலாக இருக்கிறது. அதிலேயும், கடந்த மூன்று ஆண்டுகளாக நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஒரே காரணத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு தயாரித்து கொடுத்த உரையைப் படிக்காமல் வெளியேறுவது, மக்களாட்சிக்கு விடப்பட்ட சவாலாகவே இந்தப் பேரவை கருத வேண்டியுள்ளது.

#### தேசவிரோதிகள் யார் என்று மக்களுக்குத் தெரியும்!

கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இது. கோடிக்கணக்கான மக்களுடைய விருப்பங்களுக்கு ஏற்ப செயல்படும் அரசு இது. ஆளுநர் உரை தொடங்கும்போது ‘தமிழ்த்தாய் வாழ்த்து’ பாடுவதும் முடிவுறும்போது ‘நாட்டுப்பண்’ பாடுவதும்தான் தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய மரபு. முதலிலேயே ‘நாட்டுப்பண்’ பாடவில்லை என்பதையேதிரும்பத்திரும்ப குற்றச்சாட்டாக அவர் சொல்லிக்கொண்டு வருகிறார். இந்த நாட்டின் மீதும், நாட்டுப்பண் மீதும் அளவற்ற பெரும் மதிப்பை, மரியாதையைக் கொண்டுள்ளவர்கள் நாங்கள். தேசிய ஒருமைப்பாட்டிலேயும், நாட்டுப்பற்றிலேயும் யாருக்கும் குறைந்தவர்கள் இல்லை நாங்கள் என்பதை, இந்தப் பேரவை உறுப்பினர்கள் சார்பாக மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அழுத்தந்திருத்தமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யாரும் எங்களுக்கு தேசபக்தி குறித்துப் பாடம் எடுக்கின்ற நிலைமையில நாங்களும் இல்லை; தேசபக்தி பாடம் எடுக்கும் அளவுக்கு இந்த தேசத்துக்காக அவர்கள் போராடியவர்களும் இல்லை. ஜனநாயக தேசத்தின் அரசமைப்பு மாண்பை, எதேச்சாதிகாரத் தன்மையுடன் மாற்ற நினைப்பவர்கள் தான், இன்றைய காலக்கட்டத்தில் தேச விரோதிகள். அவர்கள் யாரென்று நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை, நம்முடைய எழும்பூர் தொகுதி உறுப்பினர் பரந்தாமன் அவர்கள் தொடங்கி, நிறைவாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வரை பேசியிருக்கிறார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு பதில் அளித்துப் பேச வேண்டிய நான் இன்றைக்கு ஆளுநருக்கு விளக்கம் அளித்துப் பேசும் நிலையில் இருக்கிறேன்.

#### அண்ணா, கலைஞர் எதிர் கொள்ளாத நெருக்கடி இது!

இது பேரறிஞர் பெருந்தகை அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும், இன்னும் சொல்லப் போனால், மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும், அம்மையார் ஜெயலலிதா அவர்களும் எதிர்கொள்ளாத நெருக்கடி இது. அவர்கள் காலத்தில் இருந்த ஆளுநர்கள்கூட இப்படி இல்லை. முரண்பாடுகள் இதயத்தில் இருந்தாலும், அதை ரணமாக்கும் வகையில் செயல்பட்டதில்லை. அந்த வகையில், அளவுக்கு அதிகமான சோதனைகளை எதிர்கொண்டவனாக நான் நின்று கொண்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும், சோதனைகள் எனக்குப் புதிதல்ல; சோதனை களை வென்று வளர்ந்தவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைச் சீண்டிப் பார்ப்பவர்கள், மனதிற்குள் மகிழ்ச்சி அடையலாமே தவிர, அது என்னை எதுவும் செய்யாது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

---

அரசுப் பள்ளிகளில் 17,312 வகுப்பறைகள் கட்டத் திட்டமிட்டு – 9416 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன!

## தற்போது 7,898 வகுப்பறைகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

**சென்னை, ஜன.26- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, கிருஷ்ணகிரி தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, “தமிழ்நாட்டுப் பள்ளிகளில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 17,314 வகுப்பறைகள் கட்டத் திட்டமிட்டு, அதில் 9,416 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன”என்றும், “தற்போது 7,898 வகுப்பறைகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன” என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:–

கி. அசோக்குமார்: கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப் பட்டணம் ஊராட்சி ஒன்றியம், ஜெகதாப் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** கிருஷ்ணகிரி மாவட்டம், ஜெகதாப் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக இரண்டு வகுப்பறைகளும், நூலக வசதிக்காக 1 வகுப்பறையும், ஆக மொத்தம் 3 வகுப்பறைகள் தேவைப்படுகிறது. இதற்கான கருத்துருக்கள் பெறப்பட்டு, அரசின் நடவடிக்கையில் உள்ளது. வரும் கல்வியாண்டில் கூடுதல் வகுப்பறைகள் வசதிகள் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்..

**கி. அசோக்குமார்:** கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்ட போதிய இட வசதி இல்லாததால், மாணவ, மாணவியர்கள் மரத்தடியில் அமர்ந்து கல்வி பயின்று வருகின்றனர். பள்ளி இடைவேளை மற்றும் உணவு இடைவேளை, மழைக் காலங்களில் போதிய இட வசதியின்றி, ஆசிரியர்களும், மாணவர்களும், மாணவியர்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அல்லது அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இடம் தேர்வு செய்து பள்ளிக் கட்டடம் கட்டித் தர அமைச்சர் முன்வருவாரா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, அந்த ஒரே வளாகத்தில் அந்த இரண்டுவிதமான பள்ளிகளும் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, தொடக்கப் பள்ளி சார்ந்திருக்கின்ற அந்தக் குழந்தைகளை கொஞ்சம் adjust செய்து உட்கார சொல்லிவிட்டு, உயர்நிலைப் பள்ளி சார்ந்த பிள்ளைகளை நாம் accommodate செய்து கொண்டிருக்கிறோம். அது தேவையில்லை. உயர்நிலைப் பள்ளிக்கென்று தனியாக வகுப்பறை தருவதுதான் சரியாக இருக்கும். ஏற்கெனவே இந்தப் பள்ளியில் 13 வகுப்பறைகள், ஒரு அறிவியல் ஆய்வகம், இரண்டு ஆண்கள் கழிப்பறை மற்றும் இரண்டு பெண்கள் கழிப்பறை உள்ளன.

நீங்கள் சொன்னது மாதிரி அங்கிருக்கக்கூடிய இடத்தின் வசதிக்கேற்ப இரண்டு வகுப்பறைகளும், ஒரு நூலகமும் கட்ட முடியுமா என்பதை நமது துறையின் மூலமாக பார்க்கச் சொல்லியிருக்கிறோம். இடமில்லாதபட்சத்தில் தனியாக இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தில் கட்டித் தருவதற்கு கண்டிப்பாக நம்முடைய அரசு ஆவன செய்யும்.

**கி.அசோக்குமார்:** கட்டிநாயனபள்ளி பஞ்சாயத்தில் வீட்டு வசதி வாரியத்தின் இடம் 1 ஏக்கர் 82 சென்ட் இருக்கிறது என்று நம்முடைய CEO அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒன்றியம் கம்மம்பள்ளி ஊராட்சியில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளி 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் மற்றும் ஆங்கிலம் என இரு பிரிவுகளில் 459 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். 2019–2020–ஆம் ஆண்டில் 302 மாணவ, மாணவிகளும், 2020–2021–ஆம் ஆண்டில் 342 மாணவ, மாணவிகளும், 2022––023 ஆம் ஆண்டில் 391 மாணவ, மாணவிகளும், 2023–2024 ஆம் ஆண்டில் 415 மாணவ, மாணவிகளும், 2024–2025–ஆம் ஆண்டில் 451 மாணவ, மாணவிகளும் பயின்று வருகின்றனர்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அந்தப் பள்ளிக்கூடத்தில் தொடர்ந்து மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை increase ஆகிக்கொண்டே வருகிறது. அப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியை சேர்த்து 14 வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் அறை ஒன்று மற்றும் ஆசிரியர் அறை ஒன்று என 16 வகுப்பறைகள் தேவைப்படுகிறது. தற்சமயம் பள்ளியில் 9 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. எனவே, மாணவர்களின் கல்வி நலனைக் காக்கும் பொருட்டு கூடுதலாக ஆறு வகுப்பறை கட்டடங்கள் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றிகள். அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே இருக்கிறது என்று பல விமர்சனங்களை வைத்தார்கள். ஆனால் தற்போது உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார். அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது சார்ந்து கட்டமைப்பைத் தர வேண்டியது நம்முடைய கடமை.

அதிகப்படியாக மாணவச் செல்வங்கள் அந்தப் பள்ளியில் வரும்போது, அதுசார்ந்து கட்டடங்களும், அதுசார்ந்து ஆசிரியர்களும் தேவைப்படுமெனில் கண்டிப்பாக அதை யும் செய்து தருவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

அதே நேரத்தில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஆரம்பத்தில் நாம் sanction செய்த work மட்டும் 477 பள்ளிகளில், 3,878 கோடி ரூபாய் மதிப்பீட்டில் infrastructure செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். Sanctioned work மட்டும் 17,314 வகுப்பறைகள் கட்ட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அதில், 9,416 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது வகுப்பறைகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன on going. தற்போது 7,898 வகுப்பறைகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது போன்று ஆய்வகங்கள், கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள் நாம் என்ன இலக்கு நிர்ணயித்திருக்கிறோமோ அதைத் தாண்டி, அதை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

இன்று காலை கூட நம்முடைய முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சுமார் 678 கோடி மதிப்பீட்டில் ஒரு கோப்பில் கையெழுத்துப் போட்டுவிட்டுதான் நான் இங்கு நேரடியாக வந்திருக்கிறேன். அதுசார்ந்து யார்யார்க்கெல்லாம் கட்டடங்கள் தேவைப்படுகிறதோ, கண்டிப்பாக கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.